நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னூர்.

**முன்னிலை: – திருமதி. R. கீதா. பி.ஏ, பி.எல்.**
**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், குன்னூர்.**
**(FAC) நீதித்துறை நடுவர், குன்னூர்.**

2026 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 - ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 08 – ஆம் நாள்)

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.441/2026**
**CNR.No.TNNSO50014882026**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுதரப்பில் காவல் உதவி ஆய்வாளர்,<br>அருவங்காடு காவல் நிலையம்,<br>**குற்ற எண்.19/2026.** |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | – | பிரகாஷ், (வயது – 50/2026),<br>த/பெ. பெல்லி,<br>க.எண். 4/227 A, ஜெகதளா,<br>அருவங்காடு, குன்னூர். |
| வனையப்பட்ட குற்றம் | – | U/s.296(b), 115(2) of BNS. |
| தண்டிக்கப்பட்ட குற்றம் | – | இல்லை. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 27.02.2026 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 28.02.2026 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | -- |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | -- |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 20.05.2026 |
| பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.263–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 06.06.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | – | முதல்விசாரணை: Pw.1 – 01.07.2026; Pw.2 – 13.07.2026<br>குறுக்குவிசாரணை: Pw.1 – --; Pw.2 – 13.07.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | – | 13.07.2026 |
| பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.348-இன் கீழ் | – | -Nil- |

Tmt. R. Geetha, B.A.,B.L., Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.24 17:38:23 +0400

| | | |
|---|---|---|
| தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | | |
| பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.351(1)(ஆ) – இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 15.07.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | - | -Nil- |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | - | -Nil- |
| தீர்மானம் | – | எதிரி மீதான சட்டப்பிரிவுகள். 296(b), 115(2) of BNS - இன் கீழான குற்றத்திற்கு எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| முடிவு | – | **இறுதியாக,** எதிரி மீதான சட்டப்பிரிவுகள். 296(b), 115(2) of BNS - இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரி மேற்படி குற்றங்களிலிருந்து பி.என்.எஸ்.எஸ்.பிரிவு. 278(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை<br><br>எதிரி ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 20.05.2026 - ஆம் தேதியன்று எதிரி மீதான சட்டப்பிரிவுகள். 296(b), 115(2) of BNS - இன் கீழ் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 15.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–I திரு. பட்டுராஜா, அவர்கள் ஆஜராகியும், எதிரி

தரப்பில் வழக்கறிஞர் திரு. H. நந்தகுமார், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை விசாரணை செய்தும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

**<u>1. அருவங்காடு காவல்நிலைய காவல் ஆய்வாளர் பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.193 – இன் கீழ் எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் விவரம் :–</u>**

கடந்த 27.02.2026 – ஆம் தேதி மாலை 15.30 மணிக்கு அருவங்காடு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட ஜெகதளா ஓதனட்டி பிரிவில் வைத்து அ.சா.1 – ஐ எதிரி தேவிடியா மகனே என்று பொது இடத்தில் வைத்து கெட்ட வார்த்தையால் திட்டி அவமானத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி சட்டப்பிரிவு. 296(b) of BNS – ன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரி அ.சா.1 – ஐ கையால் இடது தோள்பட்டை மற்றும் நெஞ்சில் தாக்கி அ.சா.1 – க்கு சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி சட்டப்பிரிவு. 115(2) of BNS – இன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அருவங்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு பி.என்.எஸ்.எஸ்.பிரிவு. 230 பிரிவின் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி போதிய கால அவகாசம் கொடுத்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள். 296(b), 115(2) of BNS, - இன் படியும் குற்றம் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. அரசு தரப்பில் **அ.சா.1** மற்றும் **அ.சா.2** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.7** ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

(i) **அ.சா.2** திரு. ராஜம்மாள், சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், கடந்த 27.02.2026 – ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. விஸ்வநாதன் நிலைய பொறுப்பில் இருந்தபோது உதகை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 – ஐ விசாரித்து **அ.சா.ஆ.2** புகார் வாக்குமூலம் பதிவு செய்து, அதில் அ.சா.1 – டம் **அ.சா.ஆ.1** கையொப்பம் பெற்று நிலையம் வந்து மறுநாள் 28.02.2026 – ஆம் தேதி 16.00 மணிக்கு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.19/2026, பிரிவுகள்.296(b), 115(2) of BNS – இன் கீழ் **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரியான தனது பார்வைக்கு வைத்ததாகவும்,

(ii) பின்னிட்டு அன்றையதினமே வழக்கு கோப்பை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 17.00 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, சேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.4** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.5** மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னிட்டு சாட்சிகள் சித்தார்த், துக்கராமான், சந்திரன், கார்த்திக், சேகர், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க காவல் நிலைய பிணையில் விடுவித்ததாகவும், 11.03.2026 – ஆம் தேதி அ.சா.1 – க்கு சிகிச்சையளித்த உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.ஆ.6** விபத்து பதிவேடு மற்றும் **அ.சா.ஆ.7** காயச்சான்று பெற்று வழக்கு கோப்புடன் சேர்த்ததாகவும், பின்னிட்டு அன்றையதினமே வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம்

Tmt. R. Geetha, B.A.,B.L., Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.24 17:38:41 +0400

பதிவு செய்ததாவும், தனது விசாரணையில் எதிரி மீதான குற்றம் உண்மையென தெரியவரவே புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள்.296(b), 115(2) of BNS – இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்த சங்கதிகளை தொகுத்து பி.என்.எஸ்.எஸ்.பிரிவு. 351(1)(b) பிரிவின் கீழ் வினவிய போது எதிரி மேற்படி சாட்சியங்களை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரி தரப்பில் சாட்சிகள் ஏதும் விசாரிக்கப்படவில்லை.

6. **<u>தீர்வுக்குறிய பிரச்சனை:–</u>**

இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில், எதிரி மீதான சட்டப்பிரிவுகள். 296(b), 115(2) of BNS – வின் படியான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

7. **<u>பிரச்சனை :</u>–**

கடந்த 27.02.2026 – ஆம் தேதி மாலை 15.30 மணிக்கு அருவங்காடு காவல்நிலைய எல்லைக்குட்பட்ட ஜெகதளா ஓதனட்டி பிரிவில் வைத்து அ.சா.1 – ஐ எதிரி தேவிடியா மகனே என்று பொது இடத்தில் வைத்து கெட்ட வார்த்தையால் திட்டி அவமானத்தை ஏற்படுத்தியும், பின்னிட்டு எதிரி அ.சா.1 – ஐ கையால் இடது தோள்பட்டை மற்றும் நெஞ்சில் தாக்கி அ.சா.1 – க்கு சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி சட்டப்பிரிவு. **296(b), 115(2) of BNS** – இன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அருவங்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. **<u>தீர்வு :–</u>**

அரசு தரப்பு வழக்கு யாதெனில் எதிரி மற்றும் புகார்தாரர் கூட்டாக சமரச மனு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில்

Tmt. R. Geetha, B.A.,B.L.,
Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.24 17:38:48 +0400

அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட திரு. சித்தார்த், தனது முதல் விசாரணையில்,

*" ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எதிரியுடன் நான் சமாதானமாக செல்கிறேன். எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. என்னை இந்த வழக்கில் சமாதானமாக செல்ல சொல்லி யாரும் கட்டாயப்படுத்தவில்லை. சம்பவ சமயத்தில் நான் எங்கள் ஊரிலுள்ள எனது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத ஒரு நபர் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, கையால் அடித்து காயப்படுத்தி சென்றார். அந்த நேரம் இருட்டாக இருந்ததால் எனக்கு அந்த நபர் யார் என்று அடையாளம் தெரியவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் உதகை அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அங்கு வந்த போலிசார் ஒரு பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கி சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (***புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது***). அதில் என்ன எழுதியுள்ளது என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை".*

**என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளார்.**

**9.** அரசு தரப்பு வழக்கறிஞர், இவ்வழக்கின் முக்கிய சாட்சியான புகார்தாரர் தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளார் என்பதாலும், முக்கிய சாட்சிகள் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டதாலும், மற்ற சாட்சிகளை விசாரிப்பதால் நீதிமன்றத்தின் நேரம் தான் வீணாகும் என்பதனாலும் மற்ற

சாட்சியங்களை விசாரிக்காமல் விலக்கு அளித்து அரசு தரப்பு சாட்சியங்களை முடித்துள்ளார்.

**10.** இந்த வழக்கில் அரசு தரப்பிற்கு ஆதரவாக காவல் நிலையத்திலுள்ள காவல் உதவி ஆய்வாளர் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். அவரின் சாட்சியானது தனது அரசு பணியை செய்யும்போது சொன்ன சாட்சியாகவே கருத முடியும். ஏனெனில், அரசு தரப்பு சாட்சியான புகார்தாரர் தாமே அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சி அளிக்காத போது காவல்துறையினரின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் குற்றவாளிகள் என தீர்மானிக்க முடியாது. மேலும், நமது மாண்பமை உச்சநீதிமன்றம் **மோகன் அபோட் எதிர் பஞ்சாப் அரசு 2008 MLJ Crl 212 SC மற்றும் மருத்துவர் அரவிந்த் பர்சால் எதிர் மத்திய பிரதேச அரசு 2008(3) MLJ Crl 1517 SC என்ற தீர்ப்புகளில்** குறிப்பிட்டுள்ள முக்கியமான சாராம்சம் என்னவென்றால்,

> *''தனிநபர் சார்ந்த எந்த ஒரு பிரச்சனையிலும் அரசு தரப்புக்கு சாதகமான முடிவினை எட்ட முடியாத நிலையில் வழக்கு இருக்குமேயானல் அந்த வழக்கை நிலுவையில் வைத்திருப்பது ஓர் ஆடம்பரமே என்பதால் நீதிமன்றமே குற்றவியல் நடவடிக்கைகளில் பொதுவான சமாதானத்தை ஏற்றுக்கொண்டு நீதிமன்றத்தின் நேரத்தை சேமித்து அதை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண்பதில் செலவிட முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது ''*

என குறிப்பிட்டு கூறியுள்ளது. மேற்படி தீர்ப்பினை இந்த வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்கு வழிகாட்டியாக இந்த நீதிமன்றம் எடுத்துக்கொள்கிறது. மேலும், முக்கிய சாட்சிகள் சமாதானத்தின் அடிப்படையில் வழக்கை மேல் நடத்த விரும்பாதபட்சத்தில் குற்ற வழக்கை மேல் நடத்துவது சட்டத்திற்கு புறம்பான ஒரு செயல் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் புகார்தாரரும், எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டபடியால் **பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.**359 - இன் கீழ் மனுத்தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. ஆனால், வழக்கின் சட்டப்பிரிவுகள் சமாதானமாக செல்லக்கூடிய சட்டப்பிரிவுகள் அல்ல என்ற காரணத்தினால் அந்த மனு இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

**11.** அரசு தரப்பு சாட்சியான முக்கிய சாட்சிகள் அரசு வழக்கை ஒத்து சாட்சி அளிக்காதது அரசு வழக்கிற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் காவல்துறையினரின் சாட்சியம் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவருக்கு தண்டனை பெற்றுத்தர போதுமான சாட்சியாக அமையவில்லை. ஆகவே. அரசு தரப்பு வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் அரசு நிரூபிக்க தவறிவிட்டமையால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12. <u>முடிவு:-</u>**

**இறுதியாக,** எதிரி மீதான சட்டப்பிரிவுகள். 296(b), 115(2) of BNS - இன் கீழான குற்றங்கள் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகளை மேற்படி குற்றங்களிலிருந்து பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.278(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**13.** இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.

**14.** எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று

2026 – ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

Tmt. R. Geetha, B.A.,B.L.,
Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L.,
Date: 2026.07.24 17:39:16 +0400

*(FAC)* நீதித்துறை நடுவர்,
குன்னூர்.

**பின்சேர்க்கை :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| Persecution Witnesses No. | Name of the Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1 | திரு. சித்தார்த். | புகார்தாரர். |
| அ.சா.2 | திருமதி. ராஜம்மாள், சிறப்பு உதவி ஆய்வாளர், அருவங்காடு காவல் நிலையம். | புலன் விசாரணை அதிகாரி. |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :–**

| *Exhibits No.* | *Date* | *Description of Exhibits* | *Proved by/ Attested by* |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 28.02.2026 | புகார் வாக்குமூலத்தில் கண்டுள்ள அ.சா.1 – இன் கையொப்பம். | அ.சா.1. |
| அ.சா.ஆ.2 | 28.02.2026 | புகார் வாக்குமூலம். | அ.சா.2. |
| அ.சா.ஆ.3 | 28.02.2026 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2. |
| அ.சா.ஆ.4 | 28.02.2026 | பார்வை மகசர். | அ.சா.2. |
| அ.சா.ஆ.5 | 28.02.2026 | மாதிரி வரைபடம். | அ.சா.2. |
| அ.சா.ஆ.6 | 27.02.2026 | விபத்து பதிவேடு. | அ.சா.2. |
| அ.சா.ஆ.7 | 27.02.2026 | காயச்சான்று. | அ.சா.2. |

**அரசுதரப்பு சான்றுபொருள் :–**

இல்லை.

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்** :–

இல்லை.

Tmt. R. Geetha, B.A.,B.L.,
Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.24 17:39:23 +0400

<u>**குறிப்பு:—**</u>

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

Tmt. R. Geetha, B.A.,B.L.,

Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L.,
Date: 2026.07.24 17:39:28 +0400

*(FAC)* நீதித்துறை நடுவர்,
குன்னூர்.